**கொத்மலை பிரதேச சபை**
**நுவரஎலிய மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூலை 15 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொத்மலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 8,627,699 தொகைக்காக 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காணப்படும் ரூபா 7,813,802 மீதிகளிடையே ரூபா 813,897 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(i) பெறவேண்டிய கணக்குகள்**

பெறவேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 22,182,516 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருடத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 836,042 தொகையாகக் காணப்பட்டது.

**(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்**

செலுத்த வேண்டியிருந்த 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,428,688 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருடத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,834,681 தொகையாகக் காணப்பட்டது.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

காணி உறுதிகள் மற்றும் வண்டிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 50,957,068 தொகையான காணிகள் மற்றும் கட்டிடங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,957,068 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 2,182,728 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகள் ரூபா 81,252,014 தொகை முன்னேற்றமொன்று காணப்பட்டது. அதற்காக 03 வருமான விடயங்களில் அதிகரிப்பும் 02 செலவு விடயங்களும் குறைவடைந்தும் முக்கியமாக காரணமாகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

செயலாளரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| வருமான விடயம் | 2015.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | 2015.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவையில் அறவீடு | 2015 ஆண்டின் போது சிட்டையிடல் | ஆண்டின் போது சிட்டையிட்டவைகளில் அறவீடுகள் | 2015.12.31 திகதியில் நிலுவை: 2015.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்து | 2015.12.31 திகதியில் நிலுவை: ஆண்டின் போது சிட்டையிட்டவைகளில் | 2015.12.31 திகதியில் நிலுவை: மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 1,005,153 | 576,325 | 3,464,093 | 3,001,952 | 428,828 | 462,141 | 890,969 |
| வர்த்தக அனுமதிப்பத்திரம் | - | - | 2,418,850 | 2,418,850 | - | - | - |
| வாடகை | 121,910 | 36,000 | 2,408,860 | 2,408,584 | 85,910 | 276 | 86,186 |
| ஏனையவை | 404,115 | 291,450 | 1,747,147 | 1,552,597 | 112,665 | 194,550 | 307,215 |

#### 2.2.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 59 முதல் 66 இன் பிரகாரம் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் முறையான கணிப்பீடு ஒன்றின் மூலம் சபையினால் வியாபாரிகளின் பெயர்களை அனுமதிப்பத்திரப் பதிவேட்டில் உட்படுத்தி கட்டணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.3 அறிவத்தல் பலகைக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவின் பிரகாரம் சாட்டப்பட்டிருக்கும் அதிகாரத்தின் படி மற்றும் 1988 ஆகஸ்ட் 23 திகதி 520/7 இலக்கங் கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள் ஏற்பாடுகளின் பிரகாரம் கொத்மலை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் விளம்பரங்கள் காட்சிப்படுத்துவதற்கான 111 அறிவித்தல் பலகைகளுக்காக அறவிடப்பட வேண்டி காணப்பட்ட ரூபா 549,480 தொகையினை 2015 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.4 **நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 3,783,640 தொகையும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,564,456 தொகையும் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.5 **மிகை விதிப்புக்கள்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் கடந்த ஆண்டின் போது விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்பின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 67,865 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **செயலாற்றுகை மதிப்பீடு**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க குறிக்கோள்களை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த நிருவாக அறிக்கையின் மூலம் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றுகையை ஒப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

3.2 **முகாமைத்துவத் திறமையின்மை**

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த அங்கீகாரமற்ற நிர்மாணவேலைகள் தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை என தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

3.3 **செயற்பாட்டுத் திறமையின்மை**

(அ) 2014 ஆண்டின் போது மாகாண சபை மந்திரிமார் உதவிநிதியின் கீழ் கூரைத் தகடுகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக குறிப்பிட்ட நிதி ஏற்பாடுகள் கிடைத்திருக்காத போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 153,612 தொகை செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2014 மந்திரிமார் உதவி ஏற்பாடுகளின் கீழ் 1000 லீட்டர் நீர்த் தொட்டிகள் 02 உம், 500 லீட்டர் நீர்த்தொட்டி ஒன்று மற்றும் மெதகும்புர தோட்டத்திற்காக வழங்கியிருந்த 13 கதிரைகள் என்பன விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது.

3.4 **ஒப்பந்த நிருவாகம்**

பொது நிருவாக உள்ளூராட்சி மாகாண சபை இலக்கம் 2015/01 ஆம் அமைச்சின் கொண்ட சுற்றறிக்கையின் படி பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச சபைக்கு 2015 ஆண்டிற்காக ரூபா 6,000,000 தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் திசெம்பர் 31 திகதி வரை ரூபா 2,218,630 தொகைக்கான அபிவிருத்தி விடயங்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

4.1 **உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 2009 ஜூன் 09 திகதிக்கு இலக்கம் டீஎம்ஏ/2009/01 கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்று நிருபத்தின் பிரகாரம் நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று காணப்படவில்லை.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கபட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 04 வருமான விடயங்களில் 21 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையும் 07 செலவு விடயங்களில் 21 சதவீதம் முதல் 458 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி இலக்கம் 193 இன் பிரகாரம் பாதீட்டு நிதி ஏற்பாடுகள் குறைநிரப்புடன் ஒப்பீடு செய்து ஒவ்வொரு வரவு/ செலவு விடயங்களில் மிகை/ பற்றாக்குறை பற்றிய விடயங்கள் தெளிவாக்கும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பித்திருக்கவில்லை.

**4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**4.3.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

(அ) கொத்மலை புதிய நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வாராந்த சந்தை கட்டிடம் 07 வருடங்களாக பயன்படுத்தப்படாமல் காடுகள் வளர்ந்து காணப்பட்டதுடன் அதனை பராமரிப்பதற்கு அல்லது குறிக்கோள்கள் சார் விடயங்களில் ஈடுபடுத்துவதற்கு சபை ஏதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) J.D. 4866 இலக்கம் கொண்ட நிஸான் கரவன் இனத்தைச் சேர்ந்த நோயாளர் காவு வண்டி 2010 ஆண்டு முதல் 06 வருடங்களுக்கு மிகையான காலம் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டு இருந்ததுடன் அதனைத் திருத்துவதற்காகவோ அல்லது அகற்றுவதற்காகவோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.3.2 வருடாந்த கணிப்பீடு**

பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 218 இன் படி சபையின் காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்